**இலங்கை மத்திய வங்கி (சீபீஎஸ்எல்) - 2011**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

2011 திசெம்பர் 31 இல் உள்ளபடி இலங்கை மத்திய வங்கியின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசோட்டம் என்பவற்றை சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களிற்கு அமைவாக உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தருகின்றன என்று நான் அபிப்ராயப்படுகின்றேன்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஐக்கிய அமெரிக்காவின் நிவ் யோர்க் இல் சீபீஎஸ்எல் இனால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஆதனமொன்று எதிர்காலத்தில் தனது சொந்தத் தேவைக்காக சீபீஎஸ்எல் இனால் கோரப்படும் வரைக்கும் சந்தை விலையில் ஐ.நா இற்கான இலங்கையின் நிரந்தரத் தூதரகத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2011 ஆகஸ்ட் 30 ஆந் திகதி உரிமைத்துவம் மாற்றப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் மூலதனமாக்கப்படுவதற்குப் பதிலாக சீபீஎஸ்எல் இன் பதிவேடுகளின் படி கொள்வனவுக் கிரயமானது நிர்மாண முடிவுறா கணக்கின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சீபீஎஸ்எல் இனால் பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள சோமாவதி தேசியப் பூங்காவில் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் சரியான கணக்கீட்டு தீர்வினை பிரயோகிக்காது ஆதனமானது மூலதன முடிவுறா வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2009 திசெம்பர் 22 ஆந் திகதி ரூபா 175 மில்லியனிற்கு சீபீஎஸ்எல் இனால் தேசிய முதிர்ச்சி காப்புறுதிக் கட்டிடம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் அல்லது முதலீட்டு ஆதனத்தின் கீழ் இதனைக் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் முற்பணமொன்றாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 1811 பொறியியல் விடயங்களும் 35 கட்டிடப் பொருள் விடயங்களும் பெறுமதியிடப்பட்டு 2011 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள இருப்பு மீதிக்கு எடுக்கப்படாதிருந்ததுடன் அதன் காரணமாக ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள இருப்பு மீதியின் சரியான தன்மை குறித்து கணக்காய்வில் திருப்திப்பட முடியவில்லை.

### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செலுத்தப்படாத பதவியினர் ஊதியங்களின் மொத்தமான ரூபா 688,117 மீதியினை தீர்ப்பதற்கோ அல்லது சீபீஎஸ்எல் இன் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாது 03 ஆண்டுகளிற்கும் மேலாக காணப்பட்டது.

(ஆ) மீளளிக்கப்பட வேண்டிய கேள்விப்பண வைப்பு மீதியான ரூபா 2,147,547 தொகை 05 ஆண்டுகளிற்கும் மேலாக கட்டுப்பாட்டுக் கணக்கில் வைத்திருக்கப்பட்டது. எவ்வாறாயினும், இம்மீதி மீளாய்வாண்டின் இறுதி வரை வழங்குனர்களால் கோரப்படாதும் சீபீஎஸ்எல் இன் வருமானத்திற்கு மாற்றப்படாதும் காணப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---

### 2.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் மீளாய்வாண்டிற்கான சீபீஎஸ்எல் இன் செயற்பாடுகள் நிதி விளைவுகள் அதனையொத்த முன்னைய ஆண்டின் தேறிய இலாபமான ரூபா 11,744 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 46,830 மில்லியன் தேறிய இலாபத்தினை விளைவித்திருந்தது. அந்நியச் செலாவணி மீள்மதிப்பீட்டிலிருந்து முன்னைய ஆண்டிற்கான ரூபா 8,659 மில்லியன் நட்டத்திற்கெதிராக ரூபா 3,577 மில்லியன் இலாபம் மற்றும் முன்னைய ஆண்டிற்கான உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான ரூபா 4,219 மில்லியன் தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 226 மில்லியன் வருமானம் என்பன மீளாய்வாண்டிற்கான இலாபம் அதிகரிப்பதற்கு காரணங்களாகும்.

## 2.2 இலங்கையில் நிதிசார் முறைமையின் உறுதித்தன்மை நடவடிக்கைகள்

### 2.2.1 அதிகாரமளிக்கப்படாத நிதிசார் வணிகங்களிற்கெதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அனுமதியின்றி வணிகங்களை நடாத்திச் செல்லும் நபர்களுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரத்தினை 1988 இன் 78 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 37 ஆம் பிரிவு சீபீஎஸ்எல் இற்கு வழங்குகின்றது. கம்பனியொன்று அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஆளொருவரின் அமைப்பு விடயத்தில் அக்கம்பனியின் பெயர், கூட்டிணைக்கப்பட்ட நபர் மற்றும் பணிப்பாளரின் பெயரும் ஆளொருவர் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஆட்களின் விடயத்தில், குறித்த நபரின் பெயர் அல்லது கூட்டிணைக்கப்பட்ட நிறுவனத்தின் அங்கத்தினர்கள் அனுமதி வழங்கப்படாத வணிகங்களாக பிரசித்தப்படுத்த முடியும். அதன் படி வங்கிசாரா நிதி நிறுவனங்களின் மேற்பார்வையாளராக அனுமதி வழங்கப்படாத அவ்வாறான கம்பனியொன்றுக்கெதிராக நாணயச் சபை 2011 பெப்ரவரி 21 இல் பின்வரும் நடவடிக்கைகளை நடவடிக்கை எடுப்பதற்கு நெறிப்படுத்தியிருந்தது.

(i) உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மேலதிகமான வைப்புக்களை ஏற்றுக்கொள்ளாதும்/கடன்ளை வழங்க அல்லது எந்தவொரு முதலீட்டினையும் மேற்கொள்ளாதிருத்தல்.

(ii) 18 மாதங்களில் வைப்புப் பொறுப்புக்களை மீளளிப்பதுடன் ஒரு மாதத்திற்குள் மாதாந்த வைப்பு மீளளிப்புத் திட்டத்துடன் உறுதிப்படுத்தலை சமர்ப்பித்தல்.

(iii) வைப்புக்களைத் தீர்ப்பது தொடர்பில் சுயாதீன கணக்காய்வாளர் ஒருவரிடமிருந்து உறுதிப்படுத்தலொன்றை சமர்ப்பித்தல்.

(iv) வெளிவாரி கணக்காய்வாளரை மாற்றுவதுடன் பிரேரிக்கப்பட்டுள்ள மூன்று கணக்காய்வு நிறுவனங்களில் ஒன்றை நியமித்தல்.

(v) நெறிப்படுத்தல் செய்யப்பட்ட திகதியில் உள்ளவாறு வைப்புப் பொறுப்புக்கள் தொகையில் மொத்த வைப்புப் பொறுப்புக்களைத் நிச்சயித்தல்.

(vi) கம்பனிகளிற்கும் குழுவின் தொடர்புடைய தரப்பினர்களிற்கும் இதற்கு மேலும் வசதிகளை வழங்காதிருத்தல் மற்றும்

(vii) கம்பனிகளிற்கும் குழுவின் தொடர்புடைய தரப்பினர்களிற்கும் ஏற்கனவே வழங்கியுள்ள வசதிகளை நெறிப்படுத்தல் வழங்கிய திகதியிலிருந்து 03 மாத்திற்குள் முழுமையாக அறவிடுதல்.

மேலும், நிதிக் கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு முரணாக நிதிசார் வணிகங்களை மேற்கொள்ளும் நிறுவனமான கம்பனியின் பெயரினையும் பதிவுசெய்யப்பட்ட முகவரியினையும் செய்திப்பத்திரிகைகளில் பிரசித்தப் படுத்துவதற்கு எஸ்என்பீஎப்ஜ (வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வை) இன் பணிப்பாளரினால் நெறிப்படுத்தல் செய்யப்பட்டிருந்ததுடன் கம்பனிக்கெதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வுத் திகதி வரை கம்பனியானது நாணயச் சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுடன் இணங்கி ஒழுகாதிருந்த போதிலும் குறித்த கம்பனிக்கெதிராக எஸ்என்பீஎப்ஜ மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருந்தமை கணக்காய்வில் வெளிப்பட்டது. இருப்பினும், நாணயச் சபையினால் வழங்கப்பட்ட முடிவுறுத்தல் நடவடிக்கைகளை அமுலாக்கும் செயன்முறையின் கண்காணிப்பின் கீழ் கம்பனி காணப்படுவதாகவும் செயன்முறைப்படுத்தல் திருப்திகரமானதாக உள்ளதாகவும் அதனால் பெயரினைப் பிரசித்தப்படுத்தல் மற்றும் சட்ட நடவடிக்கையினை மேற்கொள்ளல் இக்கட்டத்தில் தேவையற்றதாக காணப்படுவதாகவும் சீபீஎஸ்எல் இனால் விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 தோல்வியுற்ற நிதிக் கம்பனிகள் மீதான மேற்பார்வை

1988 – 1994 வரையான காலப்பகுதியில் புனரமைக்கப்பட்ட இரண்டு கம்பனிகளிற்கும் மூடிவிடப்பட்ட ஆறு கம்பனிகளிற்கும் கலைக்கப்படும் செயன்முறையில் உள்ள ஐந்து கம்பனிகளிற்குமாக 13 முறிவடைந்த நிதிக் கம்பனிகளிற்கு நேரடிக் கடன்கள் மற்றும் மீள் நிதியிடல் வசதிகளை சீபீஎஸ்எல் வழங்கியிருந்தது. 2011 பெப்ரவரி 28 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய மொத்த மீதியில் ரூபா 1,936,494,749 கடன் தவணையும் ரூபா 4,217,766,345 வட்டியும் உள்ளடங்கியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

(அ) அறவிடவேண்டியுள்ள ரூபா 6,154,261,095 தொகையினை சீபீஎஸ்எல் இன் கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு நாணயச் சபை அங்கீகாரம் வழங்கியிருந்ததுடன் கலைக்கப்படும் செயன்முறையிலுள்ளவற்றிடம் நிலுவைத் தொகையினை அறவிடுவதற்கு சீபீஎஸ்எல் சகல நடவடிக்கைகளையும்

மேற்கொண்டிருந்தமையால் நிதிக்கூற்றுக்களை நியாயமாகச் சமர்ப்பிப்பதற்காக இந்த மீதிகளை பதிவழிப்பதே பொருண்மையானது என நாணயச் சபை கருதியிருந்தது. மேலும், கலைப்பாளர்களிற்கு சமர்ப்பிக்கப்பட்ட கொடுப்பனவுக் கோரிக்கைகள் இன்னும் வலுவுடையாதாகும் எனவும் நிலுவையினை கலைப்பாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு சகல எத்தணிப்புகளும் எடுக்கப்படுதல் வேண்டும் என்றும் 2011 மார்ச் 21 ஆந் திகதி நாணயச் சபை தீர்மானித்திருந்தது.

எவ்வாறாயினும் மேற்படி தீர்மானத்தினைத் தொடர்ந்து, கலைப்பாளர்களினால் பகிர்ந்தளிப்புகள் செய்யப்படுகையில் கலைப்புத் தொகையினை முறிவடைந்து இதுவரை செயற்படாதுள்ள ஆறு நிதிக் கம்பனிகளிடமிருந்து அறவிடுவதற்கு 2011 செப்தெம்பர் 01 ஆந் திகதி நாணயச் சபை தீர்மானித்திருந்தது. மேற்படி தீர்மானத்தினைக் கருத்திற் கொள்கையில் ஆறு மாதத்திற்குள் நாணயச் சபை ஒன்றுக்கொன்று முரணான இரண்டு தீர்மானங்களை மேற்கொண்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் முன்னர் மேற்கொண்ட தீர்மானத்தினை மாற்றியமையின் புத்திசாதுர்ய தன்மை கணக்காய்வில் கேள்விக்குரியதாகும்.

## 2.3 பிராந்திய அபிவிருத்திச் செயற்பாடுகள்

---

பங்குபற்றல் கடன் நிறுவனங்களினூடாக (பீசீஐஸ்) நிதியளித்தல் வசதிகளை வழங்குவதற்காக 20 மீள்சுழற்சி நிதியங்களையும் கடன் திட்டங்களையும் சீபீஎஸ்எல் இன் பிராந்திய அபிவிருத்தி திணைக்களம் (ஆர்டீடீ) பேணிவருகிறது. 2011 ஆம் ஆண்டில் சீபீஎஸ்எல் இன் பிராந்திய அபிவிருத்தி திணைக்களம் 20 மீள்சுழற்சி நிதியங்களையும் கடன் திட்டங்களையும் பேணிவந்திருந்த போதிலும், தனிப்பட்ட மீள்சுழற்சி நிதியங்களிற்காக தெளிவான நிதி வழங்கல் இலக்கொன்று இனங்காணப்படாதிருந்ததுடன் கண்காணிப்பு நோக்கங்களிற்காக இறுதிப் பாவனையாளர்களின் இரு வகையான வகைப்படுத்தலிற்கு கடன் வழங்கல் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டமையால் நிதிகளின் செயற்பாடுகள் மீது கட்டுப்பாட்டின்மையை அது வெளிக்காட்டியது.

## 2.4 மனித வள முகாமைத்துவம்

---

நிதியத்தின் அங்கத்தினரான சீபீஎஸ்எல் இன் ஊழியர்கள் மற்றும் ஓய்வுபெற்றவர்களிற்கும் திடீர் குணப்படுத்த முடியாத நோய்கள், பாரிய சத்திரசிகிச்சைகள் மற்றும் காலங்கடந்த நோய்கள் காரணமாக நிதிப் பிரச்சினைகளிற்கு முகம்கொடுத்துள்ளோரிற்கும் நிதி உதவி வழங்குவதனை நோக்காகக் கொண்டு

இலங்கை மத்திய வங்கியின் இடர்கள் நிவாரண நிதியம் (ஈபீடீஆர்எப்) தாபிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டின் இறுதியில் தற்போது சேவையிலுள்ள 844 ஊழியர்கள் மற்றும் 874 ஓய்வுபெற்றவர்களை நிதியம் அங்கத்தினர்களாகக் கொண்டிருந்ததுடன் நிதியத்திற்கான மொத்தப் பங்களிப்பு ரூபா 36.3 மில்லியனாகும். நாணயச் சபையின் தீர்மானத்தின் படி ரூபா 100 மில்லயனை அடையும் வரை நிதியம் பயன்படுத்தப்படுதல் ஆகாது என்று சீபீஎஸ்எல் இனால் விளக்கமளிக்கப்பட்டிருந்ததுடன் அது வரை நிதியத்தின் முதன்மைக் குறிக்கோள்கள் அடையப்பட்டிருக்கவில்லை. அதன்காரணமாக சீபீஎஸ்எல் அதன் அங்கத்தினர்களிற்கு நலன்களை வழங்குவதற்காக பிரமாண மாற்றங்களிற்கான தேவையினை கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதியமானது அதன் ஆரம்பம் தொடக்கம் குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாதிருந்துடன் அதற்குப் பதிலாக அரசாங்கப் பிணைகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஒருவரை சீபீஎஸ்எல் இல் தாபிக்கப்பட்ட வெளிநாட்டு நிதியளித்தல் செயற்திட்டத்திற்காக விடுவிப்பதற்கு 2010 பெப்ரவரி 15 ஆந் திகதி நாணயச் சபை தீர்மானமொன்றை எடுத்திருந்தது. கடன் உடன்படிக்கையின் பீ ஆம் பிரிவின் 7 ஆம் பந்தியின் படி கடன் பெறுனர் (இலங்கை அரசாங்கம்) சீபீஎஸ்எல் இனால் நியமிக்கப்பட்ட பதவியணியினரின் கிரயத்தினை ஈடுசெய்ய பங்குகொள்ளல் நிதியினை வழங்வேண்டிய போதிலும், 2011 ஆம் ஆண்டிற்காக செய்யப்பட்டிருந்த ரூபா 1,938,870 தொகையான கிரயம் இவ்வறிக்கைத் திகதி வரை பங்குகொள்ளல் நிதியிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.5 ஒப்பந்த நிர்வாகம்

------------------------------------

சீபீஎஸ்எல் இனால் 2010 ஆம் ஆண்டில் பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள சோமாவதி தேசியப் பூங்காவில் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் நிர்மாண வேலைக்காக ரூபா 59.8 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. வன சீவராசிகள் பாதுகாப்பு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் காரணமாக கட்டிடத்தின் சட்டரீதியான உரிமை சீபீஎஸ்எல் இற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக 30 ஆண்டுகளிற்கு காணியினைப் பயன்படுத்திக் கொள்வதற்காக வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்துடன் புரிந்துணர்வு உடனபடிக்கையில் சீபீஎஸ்எல் கைச்சாத்திட்டிருந்தது. இருப்பினும் சீபீஎஸ்எல் இன் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்தினால் பேணப்படும் பதிவேடுகளின் படி மீளாய்வாண்டில் 13

சந்தர்ப்பங்களில் மாத்திரம் இக்கட்டிடம் வதிவிற்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் வதிவிடக் கட்டணமாக ரூபா 71,500 மாத்திரம் ஈட்டப்பட்டிருந்தது.

## 2.6 சர்ச்சைக்குரிய விடயங்கள்

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) யூரோ 30,000,000 மில்லியன் முகப் பெறுமதியான கிரேக்க அரசாங்க முறிகளில் 2011 ஏப்ரல் 05 இல் சீபீஎஸ்எல் முதலீடு செய்திருந்ததுடன் நாட்டில் பொருளாதார மந்தம் நிலவுகையில் சந்தைப் பெறுமதி யூரோ 22,163,500 ஆகக் காணப்பட்ட போதிலும் வீத மகவர்களினால் வீதமானது கீழ்த்தரப்படுத்தல் செய்யப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து 2011 யூலை 18 இலும் 2011 நவம்பர் 23 இலும் சீபீஎஸ்எல் முறையே யூரோ 5 மில்லியன் மற்றும் யூரோ 10 மில்லியன் முறிகளை விற்பனை செய்ததுடன் யூரோ 4,911,000 நட்டத்தினை ஈட்டியிருந்தது. எஞ்சிய யூரோ 15 மில்லியன் தொடர்பில் மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றில் 2012 மார்ச் 12 ஆந் திகதி சீபீஎஸ்எல் கைச்சாத்திட்டிருந்தது. இருப்பினும் 2012 செர்தெம்பர் 12 ஆந் திகதி வரை சகல மறுசீரமைக்கப்பட்ட கருவிகளையும் சீபீஎஸ்எல் விற்பனை செய்திருந்ததுடன் இக்கொடுக்கல் வாங்கலிலிருந்து ஐ.அ.டொ 15.6 மில்லியன் நட்டத்தினை ஈட்டியிருந்தது. இருப்பினும், 2011 ஆம் ஆண்டில் ஒதுக்கீட்டுத் தொகுதியின் மீது ஐ.அ.டொ 430 மில்லியன் மொத்தமனதோர் இலாபத்தினை (சந்தைக்குச் சந்தை இலாபம் நீங்கலாக) அல்லது 6.6 சதவீத திரும்பல் வீதமொன்றை ஈட்டிக்கொள்வதற்கு சீபீஎஸ்எல் இற்கு முடிந்திருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) தெரிவுசெய்யப்பட்ட சர்வதேச நகரங்களில் அலுவலகக் கட்டிடங்களைக் கொள்வனவு செய்வதற்கு சீபீஎஸ்எல் இன் நாணயச் சபை 2011 ஜனவரி 10 ஆந் திகதி அங்கீகாரம் அளித்திருந்தது. அதற்கமைய நிவ்யோர்க் நகரத்தில் அலுவலக இடமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக ஐ.நா இற்கான இலங்கையின் நிரந்தர தூதரகத்திற்கு ஐ.அ.டொ 5,807,116 இனை சீபீஎஸ்எல் செலுத்தியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

i. சீபீஎஸ்எல் இன் எதிர்கால செயற்பாட்டுத் தேவையே இக்கொள்வனவின் நோக்கமாக காணப்பட்ட போதிலும், இடைக்கால ஏற்பாடாக நாணய அதிகாரச்சட்டத்தின் 117 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ‘‘வர்த்தக, கைத்தொழில் அல்லது ஏனைய கையேற்புகளால் நேரடியான ஆர்வம் காணப்பட்டால் அன்றி அதாவது அதன் கோரிக்கைகளினால் திருப்தி

கொள்ளக்கூடிய எந்தவொரு கையேற்பு ஆர்வமும் நீங்கலாக'' என்பதற்கு முரணாக இக்கட்டிடம் ஐ.நா இற்கான இலங்கையின் நிரந்தரத் தூதரகத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

ii. கட்டிடத்தின் சீரமைத்தல் வேலைக்காக ஐ.நா இற்கான இலங்கையின் நிரந்தர தூதரகத்திற்கு ஐ.அ.டொ 400,000 இனை சீபீஎஸ்எல் அனுப்பியிருந்தது. இருப்பினும் ஒப்பந்தகாரரை தெரிவுசெய்தல் செயன்முறை, ஒப்பந்தகாரர் கொடுப்பனவுகளிற்கான ஆதார மூல ஆவணங்கள் (வேலைச் சான்றிதழ்கள், செயன்முறைச் சிட்டைகள்) கணக்காய்விற்குப் கிடைக்கப்பெறவில்லை.

iii. 2012 மே 28 ஆந் திகதி வெளிநாட்டு அமைச்சுடன் வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்த போதிலும், 2012 யூன் மாதத்திற்கு மாத்திரம் வாடகைப் பணம் கிடைத்திருந்தது. இருப்பினும், குடியிருப்பாளரிடமிருந்து நிலுவை வாடகைகளை அறவிட்டுக் கொள்வதற்கு கணக்காய்வுத் திகதி வரை பயனுள்ள எவ்வித நடவடிக்கையினையும் சீபீஎஸ்எல் மேற்கொண்டிருக்கவில்லை.